டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 15.11.2025 சனிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 121 - Madurai | Online Edition

# சீரான உர விநியோகத்தை உறுதி செய்யும் வகையில் உரத்துறை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது

புது தில்லி, நவ.14

விவசாயிகளின் நலன் காக்கும் வகையிலும், தேசிய அளவில் உர விநியோகத்தை உறுதி செய்யும் வகையிலும், நடப்பு 2025-26 (ஏப்ரல் – நவம்பர்) ராபி மற்றும் காரீஃப் பருவத்தில் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறைளயுடன் இணைந்து உரத் துறை செயலாற்றி வருகிறது. கள்ளச்சந்தை, பதுக்கல் மற்றும் உரங்களை வேறு வகையில் திருப்பி விடுதல் ஆகியவற்றைத் தடுப்பதற்காக மாநில அரசுகளுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. உரவிநியோகம் குறித்து கண்காணிக்க நாடு முழுவதும் 3,17,054 ஆய்வுகளும் சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உரங்களை கள்ளச் சந்தையில் வைத்திருந்ததாக 5,119 பேருக்கு விளக்கம் கேட்டு அறிவிக்கைகள் அளிக்கப்பட்டன. இதில் 3,645 உரிமங்கள் ரத்து செய்யப்பட்டன அல்லது தற்காலிகமாக முடக்கப்பட்டன. 418 முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டது.

உரப்பதுக்கலுக்கு எதிரான நடவடிக்கையில், 667 பேருக்கு விளக்கம் கேட்டு அறிவிக்கைகள் அளிக்கப்பட்டது. 202 உரிமங்கள் தற்காலிகமாக முடக்கப்பட்டன அல்லது ரத்து செய்யப்பட்டன. 37 முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப் பட்டன. உரங்களை வேறு வகையில் திருப்பிவிட்டதற்காக 2,991 பேருக்கு விளக்கம் கேட்டு அறிக்கைகள் அளிக்கப்பட்டு 451 உரிமங்கள் ரத்து செய்யப்பட்டன அல்லது தற்காலிகமாக முடக்கப்பட்டன. 92 முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டன.

# விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறை உதவி இயக்குநர் தொண்டாமுத்தூர் வட்டாரத்தில் விதைப்பண்ணைகள் ஆய்வு



கோயம்புத்தூர், நவ.14

விதையே விளைச்சலுக்கு ஆதாரம், வேளாண் உற்பத்தியில் முக்கியமான இடு பொருள் விதை ஆகும். எனவே உழவர் பெரு மக்களுக்கு தரமான சான்று விதைகள் கிடைத்திட, கோவை, தடாகம் சாலையில், விதைச்சான்றளிப்பு மற்றும் மற்றும் உயிர்மச்சான்று செயல் பட்டு வருகிறது. விதைகள் சட்டம் 1966, விதைகள் விதிகள் 1968-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி சான்றளிப்புப் பணிகளை நெறிமுறைப் படுத்தி, அறிவிக்கை செய்யப்பட்டபயிர் இரகங்களில், முளைப்புத் திறன், புறத்தூய்மை, இனத்தூய்மை மற்றும் விதை நலன் கொண்ட விதைகளை சான்றளிப்பு செய்யும் பணிகளை மேற்கொள்கிறது.

கோவை மாவட்டத்தில் தொண்டாமுத்தூர் வட்டாரத்தில் நெல் IR 20 . BPT 5204, CO 51, Improved White Ponni, ADT 37, CO 55, ASD 16, CR 1009 ஆகிய இரகங்களில் விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி விதைப்பண்ணகள் விதைச்சான்று அலுவலர்களால் வயலாய்வு மேற்கொள்ளப்படும். இனத்தூய்மை, புறத்தூய்மை மற்றும் நல்ல முளைப்புத்திறன் கொண்ட சான்று விதை விவசாயிகளை சென்று அடைய அரசு விதைப்பண்ணை அமைத்து விதைச்சான்றளிப்பு அலுவலர்களால் பயிர்களின் முக்கிய பருவங்களில் ஆய்வு செய்யப்பட்டு, விதை சுத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்ட பின் விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு விதை ஆதாரம், சான்று நிலைக்குரிய குறைந்தபட்ச விதை தர நிலையில் தேர்ச்சி பெற்ற பின்பு சான்று அட்டைகள் பொருத்தப்படும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் வட்டாரத்தில் நடப்பாண்டு வேளாண்மை துறையினால் விதை உற்பத்திக்காக அமைக்கப்பட்டுள்ள நெல் விதைப்பண்ணைகளை விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் பி.ஆ.மாரிமுத்து ஆய்வு செய்து கலவன்கள் எண்ணிக்கை, பிறரக பயிர்கள் கலப்பு மற்றும் குறித்த விக்கப்பட்ட நோய் ஆகியவற்றை அவ்வப்போது நீக்குமாறு அறிவுறுத்தினார். ஆய்வின் போது விதைச்சான்று அலுவலர்கள் துளசிமணி, க.பாரதி, ஆ.சதாசிவம் மற்றும் உதவி விதை அலுவலர் சுப்ரமணி ஆகியோர் உடன் இருந்தனர்.

# உரங்கள் போதிய கையிருப்பு உள்ளதென வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

விருதுநகர், நவ.14

விருதுநகர் மாவட்டத்தில், தற்பொழுது பரவலாக வடகிழக்கு பருவமழை பெய்து விவசாயப் பணிகள் முழு வீச்சில் நடைப்பெற்று வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் 195 தனியார் உர விற்பனை நிலையங்கள் மற்றும் 171 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் விநியோகிக்கப்படுகின்றன. இம்மாதத்தில் தற்பொழுது வரை யூரியா 918 டன், டி.ஏ.பி 231 டன், பொட்டாஷ் 93 டன், காம்ப்ளக்ஸ் உரங்கள் 592 டன், உரங்கள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு, மீதியிருப்பாக தற்போது யூரியா 1191 டன், டி.ஏ.பி 857 டன், பொட்டாஷ் 361 டன், காம்ப்ளக்ஸ் உரங்கள் 2133 டன், இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும், அனைத்து உரங்களும் தட்டுப்பாடு இன்றி கிடைத்திடும் பொருட்டு வாரம் தோறும் உரங்கள் விருதுநகர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டு வருகிறது. மேலும், உரம் கிடைப்பதில் பிரச்சனை, இரசீது இல்லாமல் விற்பனை செய்வது, அதிக விலைக்கு விற்பனை செய்வது, பிற உரங்களை வாங்க கட்டாயப்படுத்துவது மற்றும் உரம் பதுக்கல் பற்றிய புகார்கள் வந்தால் உர விற்பனை உரிமம் இரத்து செய்யப்படும் என, விருதுநகர் வேளாண்மை இணை இயக்குநர் தெரிவிக்கிறார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# கால்நடை தீவன உற்பத்தி மையம் திறப்பு விழா



தேனி, நவ.14

தேனி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை ஊட்டச்சத்தி யியல் துறையில் புதிதாக கால்நடை தீவன உற்பத்தி மையத்தினை 'தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் (பொறுப்பு) மற்றும் பதிவாளர் முனைவர் இர.நரேந்திரபாபு, நேற்று (14.11.25) திறந்து வைத்தார். இந்த கால்நடை தீவன உற்பத்தி மையத்தில் கால்நடைகளுக்கான குறிப்பாக கறவை மாடுகள், கன்றுகள், வெள்ளாடுகள், செம்மறியாடுகள் மற்றும் கோழி இனங்களுக்கான அடர்தீவன கலவை தயாரிக்கப்பட்டு கால்நடை வளர்ப்போருக்கு நியாயமான விலையில் தரமான தீவனங்களைக் கிடைக்க செய்யும் வகையிலும், தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்குவதற்கு இது ஒரு பயிற்சி மையமாகவும் செயல்படும் என்று தெரிவித்தார்.

கால்நடை வளர்ப்போர் இந்த மையத்தின் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் கு.பொன்னுதுரை இந்த மையமானது மாணவர் களுக்கு செயல்முறை விளக்கம் அளிப்பதற்கு ஏதுவாகவும், அவர்கள் பட்டம் பெற்ற பின் தொழில்முனைவோராக முயல் வதற்கும் ஒரு நல்ல மாதிரி மையமாகவும் செயல்படும் என்றும் தெரிவித்தார்.

கால்நடைகளுக்கான தீவனங்கள், தீவன மேலாண்மை ஆலோசனைகளுக்கும் தனுவாஸ் ஊட்டச்சத்தியியல் தொழில் நுட்பங்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் கால்நடை வளர்ப்பவர்கள் கல்லூரியில் உள்ள கால்நடை ஊட்டச் சத்தியியல் துறையினை தொடர்பு கொண்டு பயன் பெறுமாறு கால்நடை ஊட்டச்சத்தியியல் துறையின் பேராசிரியர்மற்றும் தலைவர் முனைவர் ந.அருள்நாதன் கேட்டுக்கொண்டார்.

தொடக்க விழாவில் கல்லூரி பேராசிரியர்கள்,மாணவர்கள், அலுவலர்கள் என அனைவரும் கலந்து கொண்டார்கள்.

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
*+91 80563 05483*
*+91 9344811812*

# நன்றி

# அட்மா திட்டத்தில் சிறந்த வேளாண்மை தொழில்நுட்ப நடைமுறைகள் பண்ணைப் பள்ளி பயிற்சி!



சேலம், நவ.14

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரம், நிலவாரப்பட்டி கிராமத்தில் வேளாண்மைத் துறை மூலம் செயல்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டத்தின் கீழ் திருந்திய நெல் சாகுபடி சாகுபடி பயிற்சி நடைபெற்றது.

பயிற்சியில் அட்மா திட்ட தலைவர் R.சந்திரசேகரன் கலந்து கொண்டு தலைமை வகித்தார். சாகுல் அமீத், வேளாண்மை உதவி இயக்குநர், பனமரத்துப்பட்டி கலந்து கொண்டு வேளாண்மைத் துறை திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து விளக்கம் அளித்தார். ஸ்ரீ நிறைமதி வேளாண்மை அலுவலர் (உழவர் பயிற்சி நிலையம்) சேலம், கலந்து கொண்டு உழவர் பயிற்சி நிலையம் திட்ட செயல்பாடுகள் பற்றி விளக்கம் அளித்தார். மேலும் முனைவர் ரவி, (பூச்சியியல் துறை), வேளாண் அறிவியல் நிலையம், சந்தியூர், கலந்து கொண்டு நெல் பயிரில் பூச்சி நோய் மேலாண்மை கட்டுபாடு தொழில் நுட்பங்கள் பற்றி விளக்கம் அளித்தார். பயிற்சியில் நந்தகுமார், உதவி வேளாண்மை அலுவலர், கலந்து கொண்டு ஆடா தொடா, நொச்சி, வேப்பங் கன்று ஆகியவற்றின் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் பற்றி விளக்கம் அளித்தார். சுமித்ரா, வட்டார தொழில்நுட்ப மேலாளர், கலந்து கொண்டு இனகவர்ச்சி பொறி பற்றி விளக்கம் அளித்தார். இறுதியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் ரேணுகா நன்றியுரை கூறினார். பயிற்சியில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் நொச்சி, ஆடாதொடா, வேப்பங்கன்று மற்றும் பழச்செடி தொகுப்பு மற்றும் மண்புழு உர படுக்கை ஆகியவை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. பயிற்சியில் 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# கிராம வேளாண்மை முன்னேற்ற குழு பயிற்சி

சேலம், நவ.14

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில் சித்தேரி கிராமத்தில் கிராம முன்னேற்ற குழு கூட்டம் வேளாண்மை துறை சார்பில் நடத்தப்பட்டது. இந்த பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் கவிதா தலைமை தாங்கி பேசும் பொழுது, வேளாண்மை துறை திட்டங்களை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்திக் கொள்ளுமாறும், விவசாய உற்பத்தியை பெருக்குவதன் மூலம் கூடுதல் லாபம் பெறலாம் எனக் கூறினார்.

புதிய தொழில்நுட்பங்களை வேளாண்மையில் பயன்படுத்து மாறும் எடுத்துக்கூறினார். அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி மக்காச்சோளத்தில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை பற்றி விளக்கினார்.

உதவி வேளாண்மை அலுவலர் கார்த்திக் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் விவசாயக் கருவிகள், சான்று பெற்ற விதைகள், உயிர் உரங்கள் மற்றும் நுண்ணுயிர் உரங்கள் மானிய விலையில் பெற்று விவசாயிகள் பலன் அடைய கேட்டுக் கொண்டார். உதவி தோட்டக்கலை அலுவலர் அருள் தற்பொழுது காய்கறி செடிகள், மாங்கன்று, தென்னங்கன்று, பழச்செடி தொகுப்பு, காய்கறி விதைத்தொகுப்புகள் மானிய விலையில் பெற்று பயனடையு மாறு கூறினார். தொழில்நுட்ப வல்லுனர் வரதராஜ் அவர்கள் மக்காச்சோளம் பயிருக்கு உரம் மேலாண்மை குறிக்கும், கருவேப்பிலை மற்றும் காய்கறி சாகுபடி தொழில்நுட்பம் குறித்து விளக்கியதுடன் உயிர் உரங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து செயல் விளக்கம் செய்து காண்பித்தார். பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.



# நடப்பு ராபி பருவத்திற்கு தேவையான 11270 மெ.டன் உரங்கள் கையிருப்புள்ளது

கோயம்புத்தூர், நவ.14

கோயமுத்தூர் மாவட்டத்தில் பருவமழை காலத்தில் விவசாயிகளுக்கு உரங்கள் தடையின்றி கிடைக்கும் வகையில் 11270 மெ.டன் உரம் கூட்டுறவு மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களில் உரம் இருப்பு வைக்கப்பட்டுள்ளது என வேளாண்மை இணை இயக்குநர் மீ.தமிழ்செல்வி தெரிவித்துள்ளார்.

கோயமுத்தூர் மாவட்டத்தில் கடந்த ஒரு மாதமாக பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் விவசாயிகள் ராபி பருவ சாகுபடிப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். தற்போது 1.12 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் தென்னை, சோளம், மக்காச்சோளம், பழம் மற்றும் காய்கறிப் பயிர்கள் சாகுபடி மேற்கொண்டு வருகின்றனர். சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களுக்கு தேவையான இரசயான உரங்களான யூரியா 1456 மெ.டன், டிஏபி 2531 மெ.டன் பொட்டாஷ் 1897 மெ.டன், காம்ப்ளக்ஸ் 3894 மெ.டன் சூப்பர் பாஸ்பேட் 1492 மெ.டன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

உர மூட்டையில் குறிப்பிட்டுள்ள எம்.ஆர்.பி விலையை தாண்டி உரம் விற்பனை செய்தல், விற்பனை உரிமங்களில் இணைக்கப்படாத உரங்களை இருப்பில் வைத்து விற்பனை செய்தல் மற்றும் இணைப்பொருட்களை கட்டாயப்படுத்தி விவசாயிகளுக்கு விற்பனை செய்வது, ஆகியவை கண்டறியப்பட்டால் உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985ன்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனதெரிவித்தார்.

மேலும் உரம் தொடர்பான புகார்களுக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# நிலக்கடலையில் சிவப்பு கம்பளி புழு மற்றும் மக்காச்சோளத்தில் படைப்புழு மேலாண்மை

விருதுநகர், நவ.14

விருதுநகர் வட்டாரம், வலையபட்டி கிராமத்தில், நிலக்கடலை பயிர் சாகுபடியில் சிவப்பு கம்பளி புழு மற்றும் மக்காச்சோளப் பயிர்களில் அமெரிக்கன் படைப்புழு தாக்குதல் தென்பட்டதால் விரிவாக்க சீரமைப்பு திட்டம் 2025-26ன் கீழ் வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் கூட்டாய்வு என்ற இனத்தின் கீழ் விருதுநகர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கமீலஸ் சி லீமாரோஸ், தலைமையில் முனைவர் ஜட்டா கவிதா, உதவி பேராசிரியர், பூச்சியியல் துறை, முனைவர் கிருஷ்னகுமார், உதவி பேராசிரியர் உழவியல் துறை, வேளாண் அறிவியில் நிலையம், கோவிலாங்குளம், உதவி வேளாண்மை அலுவலர் மு.பெரியவைரவன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் சோ.இராஜேஸ், உதவி தொழில்நுட்ப மேலாளர் ர.சதீஸ்குமார் மற்றும் 20க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.




நிலக்கடலையில் சிவப்பு கம்பளி புழுவினைக் கட்டுப்படுத்த கோடை உழவு, பயிர் சுழர்ச்சி, விளக்குப்பொறி, இனக்கவர்ச்சி பொறி வைத்து கட்டுப்படுத்த அறிவுறுத்தப்பட்டது. மேலும் தாக்குதல் அதிகமுள்ள வயல்களில் கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 2 கிராம் / லிட்டர் தண்ணீர் அல்லது இமாம்மேக்டின் பென் சோயேட் 4 கிராம் / லிட்டர் தண்ணீர் அல்லது குளோரி பைரிபாஸ் 2 மி.லி / லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க அறிவுறுத்தப்பட்டது. மக்காச்சோளப் பயிர்களில் படைப் புழுவினைக் கட்டுப்படுத்த குளோரன்டரனோபுரோல் 18.5% இஇ.சி 0.4 மி.லி / ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க அறிவுறுத்தப்பட்டது.

# பாம்புகள் ஏன் சட்டை உரிக்கிறது? தெரியுமா?

பாம்புகள் தோல் உரித்தல் (சட்டை கழற்றுதல்) (MOULTING) என்பது சாதாரண நிகழ்வு மட்டுமல்ல, உயிரின் வளர்ச்சி சுகாதாரம் மற்றும் உயிர் பாதுகாப்புக்கு அடிப்படை காரணி யாகும். நாமெல்லாம் வளரும் போது






பழைய ஆடையை கழற்றி, புதிய ஆடையை அணிவது போல பாம்புகளும் அவ்வப்போது தங்களின் ஆடையை மாற்றிக் கொள்கின்றன.

**ஆனால் பாம்புகளின் ஆடை (DRESS) என்ன தெரியுமா?**

அவற்றின் மேல் தோல்தான் (SKIN)

**பாம்பு சட்டை கழற்றுதல் (ECDYSIS)**

பாம்பு வளர வளர அதனுடைய பழைய தோல் இறுகி புதிய தோல் உள்ளே உருவாகத் தொடங்குகிறது. அப்போது பாம்பு கல்லின் மீதோ அல்லது மரக்கிளையின் மீது உடலை உரசி பழைய தோலை மெதுவாக கழற்றி விடும்.அந்த நேரத்துல பாம்பின் கண்கள் பால் வெள்ளையாக மங்கிய நிறத்தில் தோன்றும். பழைய தோலை கழற்றி விட்ட பாம்பு புதிய மினுமினுக்கும் தோலுடன் வெளிவந்து புத்துணர்ச்சி பெறுகிறது. இது தான் பாம்புகளின் 'டிரஸ் கோட்' மாற்றம். இது இயற்கை கொடுத்த அற்புத பரிசு.

**தோலை உரிக்கும்போது என்ன மாற்றம் பாம்புகளில் ஏற்படும்?**

கண்களில் நிறம் மங்கும் (OPAGUE APPEARANCE) கண்களில் திரவம் உண்டாகும். உடலின் நிறம் மங்குதல் செயல்பாடுகளில் சோம்பல் நிலத்திலும், கட்டைகளிலும் உரசுதல் போன்ற அறிகுறிகள் பாம்புகள் தோலை உரித்துக்கான முன்னோட்டமாக கருதப்படுகிறது.

**பாம்புகளை ஏன் தோலை உரிக்க வேண்டும்?**

1)பாம்புகளின் தோல் நெகிழி போல நீளமுடையது. உடல் வளர்ந்த போது பழைய தோல் தளர்ந்து விடும். இதனை நீக்கி புதியதாக உருவான தோலை பெற்றுத்தான் வளர முடியும்.

2) பழைய தோலில் பூஞ்சைகள் புழுக்களால் சேதங்கள் அனைத்தும் அந்த தோலுடன் நீக்கப்படுகிறது.

3) நீண்ட ஆயுளும் இனப்பெருக்கமும் நடைபெற தோல் உரிக்க வேண்டும்.

**பாம்புகள் எத்தனை முறை தோலை உரிக்கிறது?**

பாம்பின் வகையை வயது சூழ்நிலை பொறுத்து ஒரே ஆண்டில் 4 முதல் 12 முறை தோல் உரிதல் நடைபெறலாம். இளம் பாம்புகள் வளர்ச்சியின் போது அடிக்கடி தோல் உரித்தலுக்கு உட்படுகின்றன. தோல் உரித்தல் பாம்புகளின் வாழ்வியல் முறையின் முக்கிய அங்கமாகும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# விதைப்பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

விவசாயத்தில் முக்கிய பங்கு வகிக்கும் இடுபொருள் விதை. தரமான விதைகளை விதைப்பதன் மூலமே அதிக மகசூல் பெற முடியும்.

தரமான விதை என்பது விதைச்சான்று துறையினரால் பல கட்டங்களில் வயல் மட்ட ஆய்வு மற்றும் விதைப்பரிசோதனை செய்யப்பட்ட சான்று விதைகளே ஆகும். விதைப்பரிசோதனை நிலையத்தில் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன், பிறரக கலப்பு என்று 4 விதமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படு கின்றன.

புறத்தூய்மை என்பது விதையின் சுத்தத்தை குறிப்பதாகும். அதில் களை விதைகள், பிற பயிர் விதைகள், உயிர்ப்பற்ற பொருள் ஆகியவை பரிசோதிக்கப்படுகிறது.

ஈரப்பதம் என்பது பயிர் வாரியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில் நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக இருந்தால் அதிக பூச்சி தாக்குதல் மற்றும் நுண்ணுயிர் தாக்குதலுக்கு உட்பட்டு தரம் குறைய வாய்ப்புள்ளது.

முளைப்புத்திறன் பரிசோதனையின் விதை மாதிரிகளின் முளைப்புத்திறன் பரிசோதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு விதைக்கும் குறிப்பிட்ட முளைப்புத்திறன் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. முளைப்புத்திறன் குறைந்தால் பயிர் எண்ணிக்கை குறைந்து மகசூல் பாதிக்கும். விதையின் முளைப்புத்திறன் குறையும் பட்சத்தில் விதைஅளவினைஅதிகரித்து விதைக்கு மாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

பிறரக கலப்பு என்பது ஒரே பயிரில் பல்வேறு ரக விதைகள் கலந்திருப்பது ஆகும். குறிப்பிட்ட அளவுக்கு மேல் பிறரக கலப்பு இருந்தால் விதைகள் விற்பனைக்கு பரிந்துரைக்கப்படுவ தில்லை. இதன் மூலம் வேளாண்மை துறையினரால் விதைப் பண்ணை அமைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படும் விதை களுக்கும், தனியார் உற்பத்தியாளர்களின் விதைகளுக்கும் விதைப்பரிசோதனை அடிப்படையிலேயே சான்று அளிக்கப்படுகிறது.


இதன் மூலம் தரமான விதைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய பரிசோதனை முடிவுகள் பயன்படுகின்றன. விவசாயிகள், விதை விற்பனையாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் தங்களிடம் இருப்பில் உள்ள விதைகளின் தரத்தை அறிய பகுப்பாய்வு முடிவுகள் பயன்படுகின்றன. விதைப்பரிசோதனை ஆய்வுக் கட்டணமாக பணி விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80 மட்டும் வசூலிக்கப்படுகிறது. ஆய்வு செய்யக்கூடிய விதையினை கட்டணத்துடன் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், முதல் குறுக்குத்தெரு, திண்ணப்பா நகர், காந்தி கிராமம், கரூர் 4 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

பணி விதை மாதிரிகள் விதைப்பரிசோதனை நிலையத்திற்கு பகுப்பாய்விற்கு அனுப்பும் போது விதை மாதிரியின் அளவு கம்பு, பனிவரகு, ராகி, முள்ளங்கி, கீரை விதைகள், எள் போன்ற சிறிய அளவிலான விதைகள் எனில் சுமார் 50 கிராம் அளவிற்கு குறையாமலும் நெல், மக்காச்சோளம், உளுந்து, பயறு வகைகள் போன்ற பெரிய அளவிலான விதைகள் எனில் சுமார் 150 கிராமிற்கு குறையாமல் அனுப்ப வேண்டும். விதை மாதிரிகளை துணிப்பை அல்லது பாலித்தீன் பைகளில் விதைகளை இட்டுபகுப்பாய்வு முடிவுகள் அனுப்ப வேண்டிய முகவரி, பயிர், ரகம், குறியீட்டு எண், விதை அளவு ஆகிய விவரங்கள் அடங்கிய சீட்டை இணைத்து அனுப்ப வேண்டும் என கரூர் விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் க.ரமேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

# சுமார் 250 டன் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது

ஈரோடு, நவ.14

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டாரத்தில் தற்போது நெல், மக்காச்சோளம், கரும்பு மற்றும் மஞ்சள் பயிர்கள் சாகுபடி தீவரமாக நடைபெற்று வரும் நிலையில் விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் முக்கியமாக யூரியா சுமார் 250 டன் கூட்டுறவு விற்பனை சங்கங்களிலும் தனியார் உரக்கடை களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் இந்த உர இருப்பை பயன்படுத்தி கொள்ளுமாறு க.வேலுச்சாமி, வேளாண்மை உதவி இயக்குநர், கொடுமுடி தெரிவித்துள்ளார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மக்காசோளத்தில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி



மதுரை, நவ.14

மதுரை மாவட்டம், சேடபட்டி வட்டாரத்தில் சென்னம்பட்டி கிராமத்தில் சோளம், மக்காச் சோளம், பருத்தி, பயறு வகைகள், குதிரை வாலி பயிர் களை சாகுபடி செய்து வருகின்றனர். வேளாண்மைத் துறை மூலம் சிறந்த விவசாயி நடைமுறை குறித்த பண்ணைப் பள்ளி என்ற தலைப்பில் மக்காசோளத்தில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து 14.11.25 அன்று நடத்தப்பட்டது.

வேளாண்மை உதவி இயக்குநர் கலந்து கொண்டு மத்திய மற்றும் மாநில திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துக்கூறினார். மற்றும் உயர் விளைச்சல் இரகங்கள் பற்றியும் எடுத்துகூறி விதை தேர்வு, விதை நேர்த்தி, விதைக்கும் முறை, நிலம் சிரமைப்பு பற்றி எடுத்தகூறினார். கருணாகரன், இயற்கை விவசாயி கூறுகையில் பஞ்சகாவ்யம், மீன் கரைசல், இஞ்சி பூண்டு கரைசல், மோர் கரைசல் மற்றும் திரவ அசோஸ் பைரில்லம், ரைசோபியம் ஆகிய இயற்கை உரங்களை பயன் படுத்தி பூச்சி, நோய் தாக்குதலின்றி இயற்கை முறையில் அதிக மகசூல் பெற்றிடலாம்.

டாக்டர் கே.ஜோதிலட்சுமி, பேசுகையில் விளை பொருட்களை மதிப்புக்கூட்டி விற்பனை செய்திட வேண்டும். விவசாயிகள் தொழில்முனைவோர்களாக மாறவேண்டும் என்று கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ச.கணேசராஜா கலந்து கொண்டு நீர் மற்றும் களை மேலாண்மை பற்றியும், சரியான பயிர் இடைவெளி பயிர் எண்ணிக்கை உரமேலாண்மை தொழில் நுட்பங்கள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது.

உதவி தொழில்நுட்ப மேலாளர் பிரித்திவிராஜன் கலந்து கொண்டு ஊடுபயிர் சாகுபடி மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள், திரவ உயிர் உரங்கள் பற்றியும் எடுத்து கூறினார். செ.சத்யா, விவசாயி களுக்கு உழவன் செயலி பதிவிறக்கம் மற்றும் தனித்துவமான விவசாயி அடையாள அட்டை பதிவு செய்வது பற்றியும் எடுத்துக்கூறி ஏற்பாடுகளை செய்தனர். வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் ச.கணேசராஜா நன்றி கூறினார்.

# வேளாண் முன்னேற்ற குழு கூட்ட பயிற்சி



திருச்சி, நவ.14

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டாரம், சமயபுரம் கிராமத்தில் வேளாண்மை உழவர் நலத்துறை – வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை – அட்மா திட்டம் சார்பில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்ட கிராம அளவிலான வேளாண் முன்னேற்ற குழு கூட்ட பயிற்சி நடைபெற்றது. இதில் வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராணி, பேசுகையில் மானிய விலையில் சான்று பெற்ற விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட சத்து உரங்கள், சிங் சல்பேட், போன்ற இடுபொருள்கள் வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானிய விலையில் விவசாயிகள் பெற்று பயன்படுத்திட கேட்டுக் கொண்டார். மேலும் 15.11.25 க்குள் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து இயற்கை சீற்றங்களால் ஏற்படும் இழப்பினை தவிர்க்க வேண்டுமாயும், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தில் ஆடாதொடா, நொச்சி கன்றுகள் பெற்று நடவு செய்ய கேட்டுக் கொண்டார். பயிற்சியில் சிறப்பு தொழிநுட்பவுரை வழங்கிய வேளாண் விற்பனை மற்றும் வணிகத் திட்டத்தின் வேளாண்மை அலுவலர் அனுராதா, பேசுகையில் வேளாண்மை உட்கட்டமைப்பு நிதி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள், வட்டி விகிதங்கள், மகளிர் குழுக்கான மாவு அரவை, எண்ணெய் பிழியும் இயந்திரங்கள் மற்றும் தேசிய மின்னணு சந்தை பயன்படுத்தும் முறைகள், மதிப்பு கூட்டப்பட்ட வேளாண் பொருட்கள் உற்பத்தி செய்தல் பற்றி விரிவாக விளக்கி கூறினார். இதற்கான ஏற்பாட்டினை மண்ணச்சநல்லூர் வட்டார அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் அன்பழகன், முசிறி வட்டார தொழில்நுட்ப மேலாளர் பூபதி, லால்குடி உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் ஆகியோர் செய்து இருந்தனர். கிராம அளவிலான வேளாண் முன்னேற்ற குழு பயிற்சியில் சமயபுரம்–மாணிக்கபுரம் கிராமத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகள் 40 பேர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். மேலும் பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு திரவ வடிவில் ஆன உயிர் உரங்கள், சூடோமோனஸ் எதிரி உயிரி, தொழில்நுட்ப துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

# வாலாஜா வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் இடுபொருள் விநியோகம்!



ராணிப்பேட்டை, நவ.14

அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்மை துறையின் மூலம் செயல் விளக்கத் தளை அமைப்பதற்கான இடுபொருள் வழங்கும் நிகழ்ச்சி ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில், வேளாண்மை உதவி இயக்குனர் திலகவதி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஆத்மா திட்ட முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள 9 விவசாயிகளுக்கு காட்டுப் பன்றி விரட்டி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு உபகரணங்கள் அடங்கிய இடுபொருட்கள் வழங்கப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குனர் கூறுகையில், பெரும்பாலான பகுதிகளில் காட்டுப் பன்றிகளின் நடமாட்டம் பெருகி வருவதால் விவசாயிகள் மகசூல் இழப்புக்கு ஆளாகின்றனர்.

நெல், சிறுதானியம், பயறு வகை, நிலக்கடலை, சூரியகாந்தி, கரும்பு, வாழை, கத்திரி என அனைத்து பயிர்களையும் காட்டுப் பன்றிகள் சேதப்படுத்துகின்றன. முள்வேலி, மின்சாரவேலி, பல்வேறு நிறங்களில் துணிகளை கட்டி இவற்றை கட்டுப் படுத்துகின்றனர்.

தமிழ்நாடு வேளாண் பல்கலை சார்பில் தாவர காட்டுப்பன்றி விரட்டி மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. பயிர் செய்திருக்கும் நிலத்தைச் சுற்றி பாதுகாப்பு வளையமாக செயல்படும். இந்த தாவர காட்டுப்பன்றி விரட்டி ஒரு ஏக்கருக்கு 500 மில்லி தேவைப்படும். பயிர் செய்திருக்கும் நிலத்தைச் சுற்றி வரப்பு பகுதிகளில் இரண்டடி உயர குச்சிகளை பத்தடி இடைவெளியில் ஊன்ற வேண்டும். ஒன்றரை அடி உயரத்தில் கட்டு கம்பியால் அவற்றை இணைக்க வேண்டும்.

இந்த குச்சிகளின் இருபுறமும் குறைந்தது இரண்டு அடி களுக்கு களைச்செடிகள் இருக்கக்கூடாது. சிறிய டப்பாவின் மேற்பகுதியில் நான்கு துளைகள் இட்டு 5 மில்லி திரவம் ஊற்றி

மூடவேண்டும். இதை கம்பியில் ஆங்காங்கே கட்ட வேண்டும். ஏக்கருக்கு 100 சிறிய டப்பா தேவைப்படும். துளைகளின் வழியாக திரவத்தின் வாசனை வெளியேறும். இந்த வாசனையால் காட்டுப்பன்றிகள் வயல்களை சேதப்படுத்தாமல் தடுக்கலாம். இவ்வாறு காட்டுப்பன்றியின் மூலம் ஏற்படும் பயிர் சேதத்தில் இருந்து பயிர்களை காத்து விவசாயிகள் லாபம் பெறலாம் என்று வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை அலுவலர் நித்யா, துணை வேளாண்மை அலுவலர், முத்துகுமரன் மற்றும் ஆத்மா திட்ட அலுவலர்கள் சசிகலா, ஜெயப்ரகாஷ், நர்மதா கலந்து கொண்டனர்.



# இஃப்கோ – நானோ டி.ஏ.பி – ஒரு பார்வை

நானோ டி.ஏ.பி திரவ உரத்தில் 8% தழைச்சத்தும் 16% மணிச்சத்தும் உள்ளது. நானோ டி.ஏ.பியைப் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்கையில் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரியத்தன்மை அதிகரிக்கிறது. மேலும், பயிரின் வளர்ச்சி, தரம் மற்றும் மகசூலையும் அதிகரிக்கிறது.

**பயன்படுத்தும் முறை**

ஒரு மூடி நானோ டி.ஏ.பி பாட்டிலின்அளவு= 25 மி. லி

**விதை நேர்த்தி**

ஒரு கிலோ விதைக்கு, 3 – 5 மி.லி நானோ டி.ஏ.பியைத் தேவையான அளவு நீரில் கலந்து விதையின் மேற்பரப்பில் ஒரு மெல்லிய படலம் போல் உருவாகச் செய்து, 25 முதல் 30 நிமிடம் வரை வைத்து, பின்பு நிழலில் உலர்த்தி விதைப்பு செய்ய வேண்டும்.

**வேர்/கிழங்கு/கரணை நேர்த்தி**

தேவையான அளவு நீரில் நானோ டி.ஏ.பி திரவத்தை, ஒரு லிட்டர் நீருக்கு, 3 –5 மி.லி என்றளவில் கலந்து நாற்றுகள்/ கிழங்குகள்/கரணைகளை 20 – 30 நிமிடம் ஊற வைத்து, பின்பு நிழலில் உலர்த்தி நடவு செய்ய வேண்டும்.

**இலைவழி தெளிப்பு**

2–4 மி.லி நானோ டி.ஏ.பி.யை ஒரு லிட்டர் நீரில் கலந்து பயிரின் முக்கிய வளர்ச்சி பருவங்களான (கிளைப்பு, துளிர் விடும்) தருவாயில் தெளிக்க வேண்டும்.

அதிகமாக மணிச்சத்து தேவைப்படும் பயிர்கள் மற்றும் நீண்ட கால பயிர்களுக்கு நானோ டி.ஏ.பி.யை இரண்டாம் தெளிப்பாக பூக்கும் பருவத்திற்கு முன் தெளிக்கவும்.



# பயறுவகைப் பயிர்களில் மஞ்சள் தேமல் நோய் அறிகுறிகள் மற்றும் மேலாண்மை முறைகள்

இந்நோய் பாசிப்பயறு மஞ்சள் தேமல் நச்சுயிரி என்ற கிருமியால் ஏற்படுகிறது. நோய் ஏற்படும் பருவத்தைப் பொருத்து விளைச்சல் இழப்பு 10 சதவிகிதம் முதல் 100சதவிகிதம் வரை இருக்கும். இந்நச்சுயிரி துவரை, பச்சைப்பயறு, அவரை ஆகிய பயிர்களிலும் தோன்றும்.

**நோய் ஏற்படச் சாதகமான தட்பவெப்ப நிலைகள்**

வெள்ளை ஈ-யின் எண்ணிக்கை அதிக அளவில் இருக்கும் சூழலில் வைரஸ் பரவுவதற்கு மிகவும் சாதகமாக இருக்கும்

**அறிகுறிகள்**

● முதலில் இளம் இலைகளில் சிறிய மஞ்சள் நிறப்புள்ளிகள் தோன்றும். இவை விரைவாக அளவில் பெரியதாகி, சிறிய மஞ்சள் நிறத் தேமல் அறிகுறிகளை உண்டாக்கும்.

● நாளடைவில் இலைகள் முழுவதும் மஞ்சளாகி விடும். பாதிக்கப்பட்ட பயிர்கள் தாமதமாக முதிர்ச்சியடையும்.

● குறைந்த அளவிலான பூக்கள் மற்றும் காய்களைக் கொண்டிருக்கும். காய்கள் அளவில் சிறியதாக உருமாறிக் காணப்படும்.

● பயிரின் ஆரம்ப வளர்ச்சிப் பருவத்தில் நோய் ஏற்பட்டால், விதைகள் உருவாகும் முன்பே செடிகள் இறந்துவிடும்.

**நோய்க்காரணி மற்றும் பரவும் விதம்**

● இந்நச்சுயிரி, வெள்ளை ஈக்கள் (பெமிசியா டெபாசி) மூலம் பரவுகிறது.

● இந்நச்சுயிரி, களைச் செடிகளான குரோடான் ஸ்பார் சிப்ளோரஸ் (இரயில் பூண்டு), அகாலிபா இண்டிகா(குத்தி), எக்லிப்டா ஆல்பா (கரிசலாங்கன்னி) மற்றும் இதரப் பயறு வகைக் குடும்பத்தைச் சார்ந்த பயிர்களில் தங்கி வாழும் தன்மை உடையது.

**மேலாண்மை முறைகள்**

● தேமல் நோய் பாதிக்கப்பட்ட செடிகளை விதைத்த 45நாட்கள் வரை அகற்ற வேண்டும். அதிகமான விதையளவு (25 கிலோ /

எக்டர்) உபயோகிப்பதன் மூலம் பயிர்களின் எண்ணிக்கைக் குறையாமல் பார்த்துக் கொள்ளலாம். களைச் செடிகளை அகற்ற வேண்டும்.

● நோய் எதிர்ப்பு சக்தியுள்ள உளுந்து (வம்பன் 8, 10, 11 கோ7 மற்றும் ஏடிடி 7) மற்றும் பாசிப்பயறு (வம்பன் 5, கோ 8 மற்றும் கோ 9) இரகங்களைப் பயிர் செய்யலாம்.

● கோடைக்காலத்தில் அதிகத் தாக்குதல் இருப்பதால், பெரிதும் தாக்குதலுக்குட்படும் இரகங்களை ராபி பருவத்தில் பயிர் செய்யலாம்.

● அகற்றிய பயிரை எரித்தோ அல்லது சுடுநீரில் மூழ்கச் செய்தோ வைரஸை அழிக்க வேண்டும்.

● கலப்புப் பயிராக உளுந்து அல்லது பாசிப்பயறுப் பயிர்களுக் கிடையில் ஒவ்வொரு 15 வரிசைக்கு இடையில் இரண்டு வரிசை மக்காச்சோளம் (60 x 30 செ.மீ) அல்லது சோளம் (45 x 15 செ.மீ.) அல்லது கம்பு (45 x 15 செ.மீ) பயிரை சாகுபடி செய்யலாம்.

● மஞ்சள் நிற ஒட்டுப் பொறிகளை (12 எண்ணிக்கை / எக்டர்) பயன்படுத்தி வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்தலாம்.

● விதைகளைத் தயாமீதாக்ஷம் 25டபுள்யு.ஜி அல்லது இமிடாகுளோபிரிட் 70 டபிள்யு.எஸ் (4.0 கிராம் / கிலோ) பூச்சிக் கொல்லிகளைக் கொண்டு விதை நேர்த்திச் செய்ய வேண்டும்.

● நோயைப் பரப்பும் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த, தயாமீதாக்ஷம் 25 டபிள்யு. ஜி (100 கிராம் /எக்டர்) அல்லது இமிடாகுளோபிரிட் 17.8 எஸ்.எஸ் (100 மி.லி. / எக்டர்) அல்லது மீதைல் டெமடான் (2.0 மி.லி. / லிட்டர்) அல்லது டைமீத்தோயேட் (20 மி.லி./லிட்டர்) தெளிக்கலாம்.

இவ்வாறு விவசாயிகள் பயனடையுமாறு சேலம் மாவட்டம், தாரமங்கலம் வேளாண்மை துறை மூலம் கேட்டுக் கொள்கிறோம்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

isha LMW POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பருத்தி பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் விரிவாக்க பணியாளர்கள் விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம்

மதுரை, நவ.14

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், கட்ராம்பட்டி கிராமத்தில் பருத்தி பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் விரிவாக்க பணியாளர்கள் விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம் வேளாண்மை உதவி இயக்குனர் மயில் தலைமையில் நடைபெற்றது.

வேளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர் அருள் ஞான சாமுவேல் கலந்து கொண்டு பருத்தி பயிர் சாகுபடி தொழில்நுட்பம் மற்றும் பூச்சி நோய்கள் கட்டுப்பாடு குறித்தும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள், பருத்தியில் சாரு உறிஞ்சும் பூச்சிகள் மற்றும் தண்டு கூன் வண்டு பாதுகாப்பு முறைகள் குறித்து பேசினார். வேளாண்மை உதவி இயக்குனர் வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து விரிவாக பேசினார்.

வேளாண்மை அலுவலர் நரேஷ் குமார் பருத்தி பயிரில் பயிரிட தகுந்த பருவம் நிலத் தேர்வு நிலம் தயாரிப்பு விதை அளவு விதை நேர்த்தி தொழில்நுட்பங்கள் விதைப்பு முறைகள் நீர் பாசன முறைகள் குறித்து விரிவாக பேசினார். துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன் பருத்திக்கு நீர் பாசன முறைகள் உரமிடல் முறைகள் நுண்ணூட்ட உரம் அவசியம் குறித்து பேசினார்.

உதவி வேளாண்மை அலுவலர் சுந்தர பாண்டி வேளாண்மை துறையின் மானிய திட்டங்கள் குறித்து பேசினார். வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் தொழில்நுட்ப மேலாளர் சண்முகம் புஷ்பமாலா காட்டு விலங்குகள் மூலம் விவசாய பயிர்கள் சேதம் அடைவதை தடுப்பதற்கு குறிப்பாக காட்டுப் பன்றிகளை கட்டுப்படுத்துவதற்கு தொழில்நுட்பங்கள் குறித்து பேசி அட்மா திட்டத்தின் செயல் விளக்கமான அசோலா வளர்ப்பு மற்றும் பயிர்கள் வனவிலங்குகள் மூலம் சேதம் அடைவதை தடுப்பதற்கு செயல் விளக்கம் விவசாயிகளுக்கு முகாமில் வழங்கப்பட்டது.

கூட்டத்திற்கான முன்னேற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் மூவேந்தர் மற்றும் பூவேந்திரன் செய்திருந்தனர். முகாமில் நூற்றிற்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# பயறுவகைப் பயிர்களில் அதிக மகசூல் பெற இலைவழித் தெளிப்பு கரைசல்

**டி.ஏ.பி (D.A.P) கரைசல் தெளிப்பதன் அவசியம்**

● பொதுவாக பயறுவகைப் பயிர்களில் 20-25% புரதசத்தின் மாற்றத்திற்கு மணிச்சத்து (P) முக்கியம். இந்த மணிச்சத்தும் டி.ஏ.பி கரைசலில் உள்ளது.

● மண்ணில் இருந்து மணிச்சத்து பயிர்களுக்கு கிடைப்பதைவிட இலைவழியாக தெளித்தால் எளிதாக பயிர்கள் கிரகித்து புரதச்சத்தின் மாற்றத்தை அதிகப்படுத்தும்.

● பூக்கள் பூத்த பின் இலைகளில் உற்பத்தியாகும் மாவுச்சத்தை விதையில் சேமிக்க ஏதுவாக இலைகள் பச்சையாக இருக்கவும் தேவைப் படும் தழைச்சத்தும் டி.ஏ.பி கரைசலில் உள்ளது. (டி.ஏ.பி யில் 18% N-ம் 46% P-ம் உள்ளது)

**டி.ஏ.பி கரைசல் தயாரிப்பு**

● பயறுவகைப் பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு 2% டி.ஏ.பி கரைசல் தயாரிக்க 4 கிலோ தேவைப்படுகிறது.

● 4 கிலோ டி.ஏ.பி உரத்தை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து இரவு முழுவதும் ஊற வைக்க வேண்டும்.

● இரவில் 4 முறை இக்கரைசலை நன்றாக கலக்க வேண்டும்.

● மறுநாள் காலையில் தெளிந்த நீரை வெள்ளைத் துணியால் வடிகட்டி அந்த நீருடன் 190 லிட்டர் தண்ணீர் கலந்து காலை/ மாலை நேரத்தில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்.

**தெளிக்கும் காலம்**

பயறுவகைப் பயிர்களில் விதைத்த 30வது நாள் ஒரு முறையும் 45வது நாள் ஒரு முறையும் தெளிக்கலாம். (அல்லது) பூக்கும் தருணத்தில் ஒரு முறையும் 15வது நாள் கழித்தும் தெளிக்கலாம்.

**பயன்கள் :** பூக்கள் கொட்டாது. காய்களில் மணி (பருப்பு) திரட்சி யாக இருக்கும். காய்களின் எண்ணிக்கை கூடும். மகசூல் வழக் கத்தை விட 20% அதிகரிக்கும். எளிய தொழில்நுட்பம், செலவு குறைவு, வரவு அதிகம்.

**யூரியா கரைசல் தெளிப்பு**

● உளுந்து மற்றும் பச்சைப்பயிரில் மகசூலை அதிகரிக்க 2கிலோ யூரியாவை 200 லிட்டர் நீரில் கரைத்து (1% கரைசல்) ஒரு ஏக்கருக்கு இலைவழியாகத் தெளிக்கலாம்.

**தெளிக்கும் காலம் :** பூக்கும் தருணத்தில் ஒரு முறையும் 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் தெளிக்கலாம்.

**TNAU பயறு ஒண்டர் தெளிப்பு**

TNAU பயறு ஒண்டர் 2 கிலோவை 200 லிட்டர் நீரில் கரைத்து ஒட்டும் திரவம் சேர்த்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கலாம்.

**தெளிக்கும் காலம்** : பூக்கும் பருவம்

**பயன்கள்**

1. பூக்கள் உதிர்வது குறையும்.
2. பயறு விளைச்சல் 20 சதம் வரை கூடும்.
3. வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும் என சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா தெரிவித்தார்.

